7th August 1965]

திரு. ம. கமலநாதன் : கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்தின் கீழ், அங்கே உள்ள விவசாய சங்கத்தினிடமிருந்து அதிகப்படியான ஸ்பெஷல் ரேட்டை ரத்து செய்யக் கோரி ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்காக தனிக் கேள்வி வேண்டும்.

Palani Hills Wild Life Association

* 117 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Scheme and the amount spent on the expansion of Palani Hills Wild Life Association?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No proposal or scheme is under consideration for expansion of the Palani Hills Wild Life Association. The Association has also not sent any proposal. Hence, no expenditure has been incurred in this behalf.

நகராட்சி மன்றங்களின் ஆட்சி மொழி

* 118 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துவதற்கான புதிய உத்திரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்கள் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்குப் பொருத்தமான துணை விதிகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளலாமென்று அவைகட்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள் பின்பற்றக்கூடிய மாதிரித் துணை விதிகளையும் தயாரித்துப் பின்பற்றப்படுவதற்காக அவைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாதிரித் துணை விதிகளின் நகல் *மன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

நகரசபைகளின் வருமானம்

* 119 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைகளின் வருமானத்தை அதிகரிப்பது எப்படி என்று ஆலோசனை கூற அரசாங்கம் ஏதேனும் கமிட்டி அமைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

---

* 434-ம் பக்கத்தில் 111-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.